# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தெங்குப்பொருள் அபிவிருத்தி (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1984, நவம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1984, நவம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 60

# 1984 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தெங்குப்பொருள் அபிவிருத்தி (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1984, நவம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 53/82
1627

**தெங்குப்பொருட் கைத்தொழிலின் அபிவிருத்திக்கென உருவாக்கப்பட்ட குறித்த சில நிதியங்களுக்காகச் சேகரிக்கப்பட்டு வரவுவைக்கப்பட்ட பணங்களின் விதிப்பனவையும் அத்துடன் கொடுப்பனவையும் செல்லுபடியாக்குவதற்கும், அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. (1) இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கத் தெங்குப்பொருள் அபிவிருத்தி (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். **சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

(2) இச்சட்டத்தின் இப்பிரிவினதும் 2 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள் தவிர்ந்த ஏனைய ஏற்பாடுகள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

இப்பிரிவும், 2 ஆம் பிரிவும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. (i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறும் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆம் தேதிக்கும் 1977 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்கும் இடையில், ஈரமூலர்த்தப்பட்ட தேங்காய் கப்பலேற்றுநர்கள்மீது சுமத்தப்பட்டு தெங்குப்பொருள் அபிவிருத்தி அதிகார சபையால் பேணப்படும் தெங்குப்பொருள் அபிவிருத்தி நிதியத்திற்குள் செலுத்தப்பட்டுள்ளவையும் ; **பணங்களின் விதிப்பனவையும் கொடுப்பனவையும் செல்லுபடியாக்கல்.**

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 26 ஆம் தேதிக்கும் 1978 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் தேதிக்கும் இடையில் தெங்கு உற்பத்திப் பொருட்களின் கப்பலேற்றுநர்கள் மீது சுமத்தப்பட்டு தெங்குப்பொருள் அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்படும் ஈரமூலர்த்தப்பட்ட தேங்காய் சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி நிதியத்திற்குள் செலுத்தப்பட்டுள்ளவையும் ;

(iii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆம் தேதிக்கும் 1981 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் தேதிக்கும் இடையில் ஈரமூலர்த்தப்பட்ட தேங்காய் ஆலைச் சொந்தக்காரர்கள்

ஏ 079702—2,800 (84/10)

மீது சமத்தப்பட்டு தெங்குப்பொருள் அபிவிருத்தி அதிகார சபையால் பேணப்படும் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்திற்குள் செலுத்தப்பட்டுள்ளவையும்,

ஆன எல்லா ஆயவரிகளும் செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டுச் செலுத்தப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

160 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.

3. (1) தெங்கு உற்பத்திப்பொருட்கள் கட்டளைச்சட்டமானது, அதன் 22 ஆம் பிரிவையும் 23 ஆம் பிரிவையும் நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) தெங்கு உற்பத்திப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தென்னை சந்தைப்படுத்தற் சபைக்கும் தெங்குப்பொருள் பதனிடும் சபைக்கும் செலுத்தப்பட்டவையான எல்லா ஆயவரிகளும் செல்லுபடியான முறையில் செலுத்தப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

440 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.

4. (1) தென்னை ஆராய்ச்சிக் கட்டளைச்சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அதன் 6 ஆம் பிரிவை நீக்கிவிடுவதன்மூலம்; அத்துடன்

(ஆ) அதற்கான இரண்டாம் அட்டவணையை விட்டுவிடுவதன் மூலம்.

(2) தென்னை ஆராய்ச்சிக் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அறவிடப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தென்னை ஆராய்ச்சிச் சபைக்குச் செலுத்தப்பட்டவையான எல்லா ஆயவரிகளும் செல்லுபடியானமுறையில் செலுத்தப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

1967 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தைத் திருத்துதல்.

5. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தென்னந்தும்புச் சட்டமானது, அதன் 18 ஆம் பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

(2) தென்னந்தும்புச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தென்னை சந்தைப்படுத்தற் சபைக்கும் தெங்குப்பொருள் பதனிடும் சபைக்கும் செலுத்தப்பட்டவையான எல்லா ஆயவரிகளும் செல்லுபடியான முறையில் செலுத்தப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

தெங்குப்பொருள் பதனிடும் சபையாலும் தென்னை சந்தைப்படுத்தற் சபையாலும் சேகரிக்கப்பட்ட பணங்களைச் செல்லுபடியாக்கல்.

6. தென்னை சந்தைப்படுத்தற் சபையாலும் தெங்குப்பொருள் பதனிடும் சபையாலும் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதி முதல் 1972 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் தேதிவரை சேகரிக்கப்பட்ட எல்லா ஆயவரிகளும் செல்லுபடியான முறையில் சேகரிக்கப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக — பொருள்கோடல்.

"தென்னை சந்தைப்படுத்தற் சபை" என்பது, 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30 ஆம் தேதிய 15,004 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையால் உருவாக்கப்பட்டதும் 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் தேதிய 69/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கலைக்கப்பட்டதுமான சபை எனப் பொருள்படும்;

"தெங்குப்பொருள் பதனிடும் சபை" என்பது, 1972 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 7 ஆம் தேதிய 15,005 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையால் உருவாக்கப்பட்டதும் 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் தேதிய 69/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கலைக்கப்பட்டதுமான சபை என்று பொருள்படும்;

"தென்னை ஆராய்ச்சிச் சபை" என்பது, 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30 ஆம் தேதிய 15,004 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட சபை என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*